2004 நவம்பர் 18]

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த ஆதிதிராவிடர் நலத் துறையின் 574 விடுதிகளுக்கும் இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் அரசால் சொந்தக் கட்டடம் கட்டப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். நடப்பு ஆண்டோடு 574 விடுதிகளுக்கும் அரசு சொந்தக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட உள்ளன. இத்துறையின் ஆதிதிராவிட மாணவர் மாணவியர்கள் விடுதிகள் 1,076; பழங்குடியினர் மாணவ மாணவியர்கள் விடுதிகள் 26; ஆக மொத்தம் 1,102 விடுதிகளையும் அரசு சொந்தக் கட்டடங்களாக மாற்றிய பெருமை இந்தியாவிலேயே தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலேயும் இதுபோன்ற சாதனை கிடையாது. இந்த விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை சுமார் 1.30 இலட்சம் ஆகும். இவர்களுக்கு உணவுக் கட்டணமாக ஆண்டுக்கு சுமார் 40 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர்களின் கல்வி முன்னேற்றத்திற்குச் சிறப்பான திட்டங்களின்மூலம் கோடிகோடியாக ரூபாய் ஒதுக்கீடு செய்து கொடுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பார்வைக்கு மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையைக் கொண்டு சென்று தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் கந்திலியில் ஆதிதிராவிட மாணவர் விடுதி கட்டுவதற்காக சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டு இட ஒதுக்கீடு செய்யாத காரணத்தினால் இரண்டு வருடங்களாக தாமதம் ஆகி வருகின்றது. உடனடியாக அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து இந்த நிதியாண்டில் அதை கட்டித் தருவார்களா என்பதைத் தங்களின்மூலம் அறிய விரும்புகிறேன்.

[2004 நவம்பர் 18

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கைப்படி, வேலூர் மாவட்டத்தில் மொத்தம் உள்ள 43 விடுதிகளில் வாடகைக் கட்டடங்களிலே இயங்கி வந்த விடுதிகள் 24. அதிலே 21 விடுதிகளுக்கு அரசு கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 3 விடுதிகளுக்கும் இடத் தேர்வு முடிந்துவிட்டது. நடப்பாண்டில் விடுதிகள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 37, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

37—

சொகுசுப் பேருந்து

* **18201—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணியிலிருந்து அரசுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் சென்னை சென்று வந்த சொகுசுப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளதை மீண்டும் இயக்குவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,(அ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் பேராவூரணியிலிருந்து சென்னைக்கு 2 சொகுசுப் பேருந்துகள் 2 நடைகள்வீதம் நாள்தோறும் நிறுத்தப்படாமல் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணியிலிருந்து சென்னைக்கு தமிழ்நாடு அரசு